| | |
|---|---|
| அ.வ.எண். | 91/2015 |
| பெயர் | கௌசிக் ராஜ் |
| தந்தை பெயர் | சந்திரசேகர் |
| சாட்சி | வா.சா.1 |
| நாள் | 11.02.2020 |

**2 மற்றும் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் பயன்படுத்தி வரும் வண்டிப்பாதையை மனை இடம் என வகைப்படுத்தியுள்ளதை மாற்றுவதற்காக பரிகாரம் கோரி இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளேன். வழக்கு சொத்தின் சர்வே எண் என்னவென்றால் 284/4. காலி இடமாக காண்பிக்கப்பட்டுள்ள சர்வே எண் என்னவென்றால் 284/11 பி. வருவாய்த்துறை ஆவணங்களில் காலி இடம் என தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ஆமாம். 1 ம் பிரதிவாதி என்னுடைய சித்தப்பா. 1 ம் பிரதிவாதி 284/2 பி11 ல் 2160 3/4 சதுரடியை கிரையம் பெற்றுள்ளார் என்றால் ஆமாம். அதனை யாரிடமிருந்து வாங்கினார் என்றால் 3 ம் நபர்களிடமிருந்து வாங்கினார். அந்த 2160 3/4 அடி உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றால் ஏபி என உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது. அவ்வாறு உட்பிரிவு செய்யப்பட்டதில் 284/2 பி11 ஏ என்பது 1 ம் பிரதிவாதியின் சொத்து என்றால் ஆமாம். அவ்வாறு உட்பிரிவு செய்யும் போது 284/2 பி11 பி என குறிப்பிடப்பட்டுள்ளது வண்டிப்பாதை என நான் கூறுகிறேன் என்றால் ஆமாம். வண்டிப்பாதையின் நீளம் 50 அடி, அகலம் சுமார் 10 அடி இருக்கும். அந்த வண்டிப்பாதையில் பஞ்சாயத்தில் நாங்கள் பணம் கட்டியதன் அடிப்படையில் பைப் போடப்பட்டுள்ளது. 2003, 2006 ஆவணங்களில் வண்டிப்பாதை என குறிப்பிட்டுள்ளதாக நான் கூறுகிறேன் என்றால் ஆமாம். நீதிமன்ற ஆணையாளர் வழக்கு சொத்தை பார்வையிட்டாரா என்றால் பார்வையிட்டார். பார்வையிட்டு தன்னுடைய அறிக்கையை தாக்கல் செய்துள்ளார் என்றால் ஆமாம். தன்னுடைய அறிக்கையில் வண்டிப்பாதையை குறிப்பிட்டுள்ளார் என்றால் ஆமாம். காலி இடம் என குறிப்பிட்டுள்ளதை வண்டிப்பாதை மாற்றவேண்டும் என நான் கோருகிறேன் என்றால் ஆமாம். பிரதிவாதிகள் நீதிமன்ற உத்தரவிற்கு கட்டுப்படுவார்கள் என்றால் ஆமாம்.

**ஒம்/-திரு.எஸ்.பிரின்ஸ் சாமுவேல் ராஜ்,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**மேட்டூர்.**